RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s810

OPEN ACCESS

# கு. அழகிரிசாமி சிறுகதைகளில் வெளிப்படும் பல்வேறு நிலைகள்

**வீ. விஜயகுமார்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 600030, தமிழ்நாடு, இந்தியா

# Various Stages that Emerge in the Short Stories of Ku. Azhagirisamy

**V. Vijayakumar** [a, *]

[a] Department of Tamil, Pachaiyappa's College, Chennai - 600030, Tamil Nadu, India

* Corresponding Author: tamilanvijayveera@gmail.com

Received: 23-04-2021
Revised: 03-05-2022
Accepted: 15-05-2022
Published: 20-07-2022

Check for updates

## ABSTRACT

When looking at the literary pop of the Tamil short story world. K. Alagirisamy, who wrote the life of the common people in the society through short stories as the best literature. It is noteworthy that his literary work contributed greatly to the development of short stories. His stories are about the shadow of the people who browse everyday in this society and their experiences. Ott has recorded a whole lot of stories. Literature is the reflection of the whole life of human society in written form, like images that reflect in a mirror. Although a creator is not fully told about society, many works have come out that speak to a few problems within the same society. To all people born into the community. It is natural for everyone to have many trials and tribulations. Not all experiences are the same for everyone. Everyone's experiences are different. Each of these experiences can tell a whole new, new chapter. Characteristics of different human beings in society. Men, women and children each have their own mental flow at all stages as they age Their mental flow at all levels varies in each story. Has revealed. In that way we can see that K. Alagirisamy has narrated various stages in the society through his short stories. Move with this in focus. The environment, the excitement of the city people, the cruelty of hunger. The condition of the charcoal area. As highlighting the lives of ordinary human beings. This review is to explore these.

**Keywords:** Azhagirisamy, Short Story, Society, Characters

## முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் சிறுகதை படைப்பில் அவருக்கு என்று ஒரு இடத்தைப் பிடித்தவர் அழகிரிசாமி. இலக்கியங்கள் மூலம் சமூகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவருடைய சிறுகதைகள் அனைத்தும் எளிய மனிதர்களின் வாழ்வியலையும் மன உணர்வுகளையும் சமூகத்திற்கு வெளிபடுத்துபவையாகவே இருக்கின்றன. அவருடைய சமகாலத்தில் உலவிய மனித மனங்களின் உள் உணர்வுகளின் வெவ்வேறு கோணங்களை சிறுகதைகளில் உள்ள கதாபாத்திரங்களின் வழியே வெளிப்படுவதை பார்க்கமுடிகின்றது. தமிழ்ச் சிறுகதை உலகில் இலக்கிய பரப்பை உற்று நோக்கும் போது சமுதாயத்திலுள்ள எளிய மக்களின் வாழ்க்கையை சிறுகதையின் மூலம் சிறந்த இலக்கியமாக படைத்தவர் அழகிரிசாமி. அவருடைய படைப்புகளால் சிறுகதைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு உண்டு என்பதை அவருடைய கதைகள் மூலம் உணர முடிகிறது. அவரது கதைகள் இந்த சமுதாயத்தில் அன்றாடும் உலவும் மனிதர்களின் நிழலையும் அவர்களின் அனுபவங்களையும் கதைகளில் பதிவு செய்துள்ளார். அதில் கிராமம், நகரம் என பல வகையான பின்னணிகளையும் பார்க்க முடிகின்றது. நகர வாழ்க்கையின் பதிவுகளையும்,கிராம வாழ்க்கையின் பதிவுகளையும் கதைகளின்

மூலம் தன் அனுபவங்களையும் பிறர் அனுபவங்களையும் இணைத்து கதைகளைப் படைத்திருக்கிறார். மனித வாழ்க்கையில் ஏற்படும் அவலங்கள் பதிவுகளும் நெகிழ்ச்சிகளும் நிறைந்ததே கு.அழகிரிசாமியின் கதைகள். அவருடைய சிறுகதைகள் அனைத்தும் பொய்யாக இல்லாமல் ஒரு உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் மனநிலையை கொண்டது. எல்லாக் காலங்களிலும் அவருடைய கதைகள் பொருந்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது. அவருடைய கதைகளில் காணப்படும் பல்வேறு நிலைகளை அடையாளம் காட்டுவதாக இக்கட்டுரை எடுத்துரைக்கப்படுகிறது.

## நகர வாழ்வியலின் சுற்றுச்சூழல் நிலை

சமுதாயம் எனப்படுவது பரந்துபட்ட மக்கள் கூட்டத்தின் பகுதியாகும். ஆழமான எண்ணங்களையும் பரந்து விரிந்த மனப்பான்மையையும் கொண்டது. இச்சமுதாயம் காலத்திற்கு ஏற்றவாறு பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.ஒரு தனி மனிதனின் செயல்களால் உண்டாகும் தவறுகள் அனைத்தும் அவன் தொடர்புடைய சமுதாயத்தை குறிக்கின்றன. "படைப்பாளி தன் படைப்பின் மூலம் சொல்ல விரும்புவதும் கதையின் மையமாக மாறிய அனுபவமே கருப்பொருள் என்பதாகிறது" என்று கூறுகிறார் என்ற விளக்கத்தின் மூலம் ஒரு சமுதாயத்தின் கட்டமைப்பை தெரிந்து கொள்ள முடிகின்றது (Mangaiyarkarasi, 2003).

"தேவ ஜீவனம்" கதையில் திருவல்லிக்கேணியில் அருணாசல முதலியார் என்பவர் வசித்து வருகிறார். சென்னை திருவல்லிக்கேணி தெருவில் இடவசதி இல்லாமல் தெருக்களில் நெரிச்சல் அதிகம், கூட்டமாக ஆள் நடமாட்டம்,தெருவில் எருமைகள், வீட்டு முன் குப்பைகள், சாக்கடைகள் இப்படி சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்ட தெருவில் வாழ்ந்து வருகிறார். அந்தத் தெருவில் காற்றும் வெளிச்சமும் சரியாக கிடைக்கவில்லை, வீட்டு திண்ணையிலும் படிக்கட்டுகளில் உட்கார்ந்து கொண்டிருக்கும் நிலைமை ஏற்படுகிறது. தெருவிலே மாடு கட்டி இருப்பதும், சாக்கடை ஒரு பக்கம், கொசுத்தொல்லை என அந்தத் தெளிவு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு இருந்தது. இது போன்ற இடத்தில் தான் அருணாச்சல முதலியார் வாழ்ந்து வருகிறார்."ஜனக்கூட்டம் பெறுத்துப் போச்சு இந்தச் சின்னத் தெருவில் இத்தனை பேர் குடித்தனம். இந்த முப்பது நாற்பது வீட்டிலே ஆடு மாடுகள் மாதிரி அடைந்து கிடக்க வேண்டியிருக்கு. ஆடு மாடாவது பட்டப்பகல்லே காடு கரைக்கு மேய்ச்சலுக்குப் போகும் இங்க மனுஷனுக்குக் கூட வீட்டை விட்டா போக்கிடம் இல்லாமல் இருக்கு" என்னும் விளக்கத்தின் படி விளக்கப்படுகின்றன (Rajanarayanan, 2017). "கு.அழகிரிசாமியை நெரிசல் நேரடியாக பாதித்ததால் இந்தக் கதைகள் உருவாகியிருக்கின்றன என்று கொள்ள இடமுண்டு" என்று குறிப்பிடுகிறார் (Krishnamoorthy, 1999). என்பதன் மூலம் எழுத்தாளரின் அனுபவத்தையும் கலந்தே எழுதியிருப்பதை உணரமுடிகிறது.

## நகர மக்களின் பரபரப்பு நிலை

"கற்பகம் விருட்சம்" கதையில் சீனிவாசன் பத்தாம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்து விட்டான். சென்னை சைதாப்பேட்டை ரயில் நிலையத்தில் வேதனையுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். தேர்வில் தோல்வி அடைந்ததால் மாலை நேரம் ஆனதும் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளும் எண்ணமும் அவனுக்கு ஓடிக்கொண்டிருந்தது. அங்கு ரயில் நிலையத்திலும் பயணிகளின் ஓட்டமும் அவர்களின் அவசரத்திலும் இந்த சமுதாயம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை பார்த்துக்கொண்டிருந்தான். "வேகமாக ரயில் வண்டிகள் வந்து போயின ஓட்டமும் நடையுமாக வந்து வண்டிகளில் ஏறிக் கொண்டிருந்தார்கள் பிரயாணிகள் சூழ்நிலை முழுவதுமே ஓட்டமும் பரபரப்பாக இருந்தது" என்ற கதைப் பகுதியின் மூலம் இந்த உலகம் யாருக்காகவும், எந்த பரபரப்பும், அவசரமும், நகரத்தின் சூழலும் நிற்பதில்லை என்பதை உணர்த்துகிறது (Rajanarayanan, 2017). "தங்களுக்கே உரிய பிரத்யோகமான பதட்டத்தின் இடையிலும் வெவ்வேறு மனித இயல்புகள் பல விதமாக வெளிப்படுவதை மிகவும் உயிரோட்டமாகச் சொல்கிறது இக்கதை" என்று கூறுகிறார் (Velirangarajan, 2016). மனிதன் தான் தன் எண்ணங்களையும் மனங்களையும் மாற்றிக்கொண்டு வாழ வேண்டும் என்ற உண்மையை இக்கதை உணர்த்துகிறது.

## பசியின் கொடுமையால் ஏற்பட்ட நிலை

"திரிபுரம்" கதையில் ஆந்திர மாநிலத்தில் இருந்து பிழைப்புக்காக நரசம்மாவும் அவள் மகள் வெங்கட்டம்மாவும் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். நரசம்மாவின் கணவர் பசியின் கொடுமை தாங்கமுடியாமல் இறக்கும் நிலை வந்து விடுகிறது. வேலைக்கு வந்த இடத்தில் நரசம்மாவுக்கு தன் வயதை காரணம் காட்டி அவளுக்கு வேலை தர மறுக்கிறார்கள். பசியின் கொடுமை கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் மன நிலையை மாறுகிறது. அவர்களை வேறு ஒரு தவறான பாதைக்கு மாற்றுகிறது. விபச்சாரத்தில் ஈடுபடும் நிலைக்கு வந்துவிடுகிறார்கள். பெற்ற தாயே மகளை தவறு செய்வதற்கு சமூகம் சொல்லும் கொடுமை நடக்கிறது. "தாயின் சம்மதம் பெற்று தாயின் கண் முன்பாகவே பசியின் காரணமாக ஒரு கன்னிப்பெண் தன் கற்பை விற்க்கும் கோர் நாடகம் அந்த இரவில் அந்தப் பரிதாபகரமான இரவில் நடந்தேறியது" என் விளக்கத்தின் வழியே பசிக்கொடுமையால் ஒரு பெண் கற்பு இழக்கும் அளவிற்கு இந்த சமுதாயம் அவர்களை ஆளாக்கி இருக்கும் நிலையை அழகிரிசாமி தன் கதையின் மூலம் சொல்லி இருப்பதை உணர முடிகிறது (Rajanarayanan, 2017). அந்த ஏழை எளிய மனிதர்களின் பதிவுகளை எழுதியவர் அழகிரிசாமி என்பதை, "உள்ளம் தொடும் சிறுகதைகளை ஒரு மேதையின் தெளிவோடும் கனிவோடும் எழுதியவர் அழகிரிசாமி" என்று எடுத்துரைக்கிறார் (Kalyanaraman, 2019).

## வறுமையால் வாழ்க்கை மாறிய நிலை

"மாறுதல்" கதையில் வரும் நாயகன் பேருந்திற்காக காத்திருக்கும் போது பத்து வயது சிறுவன் ஒரு ரூபாய் வேண்டும். எங்க அம்மாவிற்கு உடம்பு சரியில்லை என்றும்,எங்க அம்மா உங்களை வரச் சொன்னாங்க என்றும் சொல்கிறான். நாயகனுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. அந்த சிறுவன் அவங்க வீட்டுக்கும் வரச் சொல்கிறான். அவரும் அந்த சென்று பார்க்கிறார். அந்த சிறுவனின் குடும்பம் இவரை விபச்சாரத்திற்கு அழைத்து இருப்பது தெரியவருகிறது. வயிற்றுப் பிழைப்பிற்காக வாழ வழி தெரியாமல் விபச்சாரத்தில் ஈடுபடுவதை கண்டு மிகவும் வருந்துகிறார். "வறுமையின் கொடுமை எப்படி இருக்கிறது என்று பாருங்கள் அந்த பெண் துஷ்ட மிருகத்தை பார்த்து நடுங்குவது போல இந்த விபச்சார தொழிலை நினைக்கும்போதெல்லாம் நடுங்குகிறாள்" என்னும் கதை பகுதி விளக்குகின்றது (Rajanarayanan, 2017). இந்நிலையினை "எந்த ஒரு கலைஞன் தன் படிப்பில் தன் சமகாலத்து சமுதாயத்தில் உள்ள வறுமைத் துயரில் முற்றிலும் ஆழ்ந்த மக்கள் கூட்டத்தை தன் படைப்பில் கொண்டு வந்து காட்டுகிறானோ அவனே பரபரப்பாக பேசப்படுபவன் ஆவான்" என்று சுட்டிக்காட்டுகிறார் (Mercy, 1974). சமுதாயத்தில் பல குடும்பங்கள் வறுமையின் காரணமாக வழிதவறி போகும் சூழல் வந்து விடுகிறது என்பதை இக்கதையின் ஆசிரியர் தன் படைப்பின் மூலம் எடுத்துரைக்கிறார்.

## கோயில் பூசாரி குடும்பத்தின் நிலை

இந்த உலகில் வாழும் குடும்பங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு பொருளாதாரம் என்பது மிக மிக முக்கியமானதாகும். அந்த பொருளாதாரம் குறைவதால் குடும்பங்களில் வறுமை ஏற்படுகிறது. ‘‘வறுமையில் சில கோலங்கள் வறுமையின் காரணங்களில் ஒன்றான வேலையின்மையும் வறுமையின் விளைவுகளில் ஒன்றாகிய குணச்சிதைவும் இந்தக் கோலங்களில் முக்கியமானவை" என்று குறிப்பிடுகிறார் (Kovai Gnanni, 2004).

"அக்னி கவசம்" கடையில் ஊரில் உள்ள அம்மன் கோயிலில் பூசை செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார் ஆறுமுகப் பண்டாரம். ஊர் பிரச்சினையில் கோயில் மூடப்படுகிறது. பூசாரியின் குடும்பம் மிகவும் வறுமைக்கு உள்ளாகிறது. வருமானம் எதுவும் இல்லை குடும்பம் வறுமையில் இருக்கிறது பூசாரியின் மனைவிக்கு உடுத்த உடை கூட இல்லாத நிலை உண்டாகிறது. பூசாரி ஆறுமுகப் பண்டாரத்தின் மனைவி ஒரு நாள் சொல்லி அவளுடைய மூத்த மகன் நள்ளிரவில் சொல்லி ரகசியமாய் போய்க் கோயிலைத் திறந்து அம்மனின் சேலையை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான். அதை வாங்கி அவள் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டாள்" என்ற கதைப் பகுதி விளக்குகின்றது

(Rajanarayanan, 2017). இதுபோல் வறுமை என்பது யாராக இருந்தாலும் விடுவதில்லை. வறுமையின் உடும்பு பிடியில் சிக்கித் தவிக்கும் மனிதர்களின் எத்தகைய அசாதரண நிலைக்கும் துணிந்து விடுவதை அக்னி கவசம் கதை சுட்டிக்காட்டுகிறது. "நூற்றுக்கும் மேற்பட்ட அவர் சிறுகதைகளில் பல்வேறு மனநிலைகள் வெளிப்பட்டாலும் சில கதைகளின் தன்மைகளைச் சற்று விரிவாகப் பார்க்கும் போது அவருடைய கதைகளின் வசீகரம் அதிகம் புலப்படும்" என்கிறார் (Velirangarajan, 2016). இவ்வாறு எளிய மக்களின் வாழ்க்கையை மென்மையாக சொல்வதில் கு.அழகிரிசாமிக்கு பெரிய பங்கு இருப்பதை இக் கூற்றின் மூலம் அறிய முடிகிறது.

## கரிசல் பகுதியின் நிலை

கு அழகிரிசாமி சிறுகதை களங்கள் பல்வேறு களங்களை கொண்டவைகளாக இருந்தாலும் கரிசல் மண்ணின் வளத்தையும் சில கதைகளில் பதிவு செய்திருக்கிறார். "இரண்டு கணக்குகள்" கதையில் சண்முகம் நாயுடுவிடம் கடன் வாங்கிவிட்டு அதை திருப்பிக் கொடுக்க முடியாமல் தன் நாலு ஏக்கர் நிலத்தை நாயுடு இடமே கொடுக்க நினைக்கிறார். நிலம் இருந்தும் கூலி வேலைக்கு போகும் நிலைமையை இக்கதை சுட்டிக்காட்டுகிறது. "கரிசல் பிரதேசத்து வாழ்க்கையை முதன்முதலாக தமிழ் இலக்கியத்தில் கொண்டுவந்தவர். அழகிரிசாமி பற்றி பல கதைகள் கோவில்பட்டியையும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களையும் தன் படைப்புத் திறனால் அழியாதவர்களாக ஆக்கிவிட்டவர்" என்கிறார் (Sudhakaran, 1974). கரிசல் நில மக்களின் துயர் நிலைகளை சொல்கிறது. "ஐயா இந்த நாலு ஏக்கரில் பாடுபட்டால் என் குடும்பத்திற்கு ஆறு மாச செலவுக்கு தான் சரியா இருக்கு. மிச்சம் ஆறு மாசமும் கூலி வேலைக்கு போய் தான் குடும்பத்தை காப்பாற்றி வருகிறேன்" என்ற கூற்றின் மூலம் கரிசல் மண்ணில் வாழும் விவசாயியின் உண்மை நிலையினை அழகிரிசாமி அவர்கள் விளக்குகிறார் (Rajanarayanan, 2017). நிலம் இருந்தும் ஒன்றுதான் இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான் என்று அந்த கதாபாத்திரத்தின் வழியே உணர வைக்கிறார். "இருவர் கண்ட ஒரே கனவு" கதையில் வெள்ளையம்மாள் என்ற பெண் இரண்டு குழந்தைகளையும் காப்பாற்ற கரிசல் மண்ணில் கூலி வேலைக்கு போகிறாள். ஆனால் அவளுக்கு ஐந்து நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் படுத்துக் கிடந்தாள் என்பதையும் கரிசல் நிலம் பெண்களின் துன்பத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.

"வெள்ளையம்மாள் ஐந்து நாட்களாக கூலி வேலைக்குப் போகவில்லை, போகமுடியவில்லை. குளிர் காய்ச்சலோடு படுத்துக்கிடந்தாள்" கரிசல் நிலத்தில் பாடுபடும் பெண்ணின் துயரத்தை வெளிப்படுத்தி இருக்கிறார் (Rajanarayanan, 2017). எழுத்தாளர் கு.அழகிரிசாமி கூலி வேலைக்குச் செல்லும் ஏழை பெண்களின் மறுபக்கத்தையும் அவர்களின் உண்மை நிலையையும் கதையில் பதிவு செய்து இருப்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. ஒவ்வொரு கதைகளிலும் பாத்திரங்களை படைப்பதில் கு.அழகிரிசாமி சிறந்தவர். இதனை "பாத்திரங்களை எடுத்துக் கூறும் முறையிலும் சம்பவங்களை விளக்கும் நகைச்சுவைத் திறத்திலும் எதார்த்த வாழ்வின் அடித்தளத்தில் காணப்படும் மனித நிலைகளை எடுத்துக் காட்டும் சிறப்பிலும் அழகிரிசாமிக்கு இன்றைய தமிழ்ச் சிறுகதை உலகில் இணை ஒருவரும் இல்லை"என்று கூறுகிறார் (Sivathambi, 1980).

## முடிவுரை

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிறுகதை படைப்புகள் குறிப்பிடத்தக்க இடங்களை பெற்று இருக்கிறது. அந்த வகையில் கு.அழகிரிசாமியின் படைப்புகள் சிறுகதை வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்திருக்கின்றன. சமுதாயத்தில் பிறந்த மக்கள் அனைவருக்குமே பல இன்னல்களையும் அனுபவங்களையும் கடந்து செல்வது எல்லோருக்கும் இயல்பானதுதான். எல்லாம் அனுபவங்களும் எல்லோருக்குமே ஒரே மாதிரியாக அமைவதில்லை ஒவ்வொருவரின் அனுபவங்களும் ஒவ்வொரு மாதிரியானவை அந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் ஒரு புதிய அத்தியாயத்தைத் செல்லக்கூடியதாக இருக்கும். எளிமையான எழுத்து நடையில் அமைந்த அவருடைய சிறுகதைகளின் வழியே அவருடைய எழுத்து வண்ணமும் அவருடைய மனதிலுள்ள எண்ணமும் பன்முக நோக்கில் உற்றுநோக்க செய்கிறது. அன்றாடம் நாம் சந்திக்கும் எளிய மனிதர்களின் நிலையை கதைகளின்

வழியே பதிவு செய்திருக்கின்ற கு.அழகிரிசாமியின் படைப்புத் திறன்கள் பல்வேறு நிலைகளில் வெளிப்படுவதை இக்கதைகளின் மூலம் அறிய முடிகின்றது.

## References


Kalyanaraman, (2019) Ku., Alagirisamy Tholkudi Panpatin Kootukural, Vikadan Thadam, Monthily Magazine, India.

Kovai Gnanni, (2004) Tamil Ilakkiya Navalgal Thedalum Thrattalum, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Krishnamoorthy, N., (1999) Tamil Sirukathai Ilakkiya Uthigal Ku., Alagirisamy Sirukathaigal Vazhi Sirappu, Nikki Munaivagam, Karaikkal, India.

Mangaiyarkarasi, C., (2003) Ki., Ravin Sirukathai Padaipalumai, Kavya Pathipagam, Chennai, India.

Mercy, P., (1974) Irupathil Sirukathagal, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Rajanarayanan, Ki., (2017) Ku Alagirisamy Kathaigal, Sahitya Akademi, Chennai, India.

Sivathambi, (1980) Tamil Sirukathail Thottramum Valarchiyum, Tamil Puthakalayam, Chennai, India.

Sudhakaran, S., (1974) Alagirisamyin Sirukathaigal Oor Thiranaivu, Jayakumaari Press, Nagercoil, India.

Velirangarajan, (2016) Indhiya Ilakkiya Sirpigal Ku. Alagirisamy, Sahitya Akademi, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License